# இலங்கைப் பாராளுமன்றம்

## பதவி வெற்றிடம்

---

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் உள்ள உதவிப் படைக்கலைச்சேவிதர் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரித்த விண்ணப்பங்கள், கல்வித் தகைமை / உயர் கல்வித் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 22** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் **“பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே”** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இயைத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்).

1. **சம்பள அளவுத்திட்டம்:-**

   2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 58,295-3x1,335/8x1,630/2x 2,170 - 79,680/- (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் உட்பட இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் 128,000/-) ஆகும்.

2. **வயதெல்லை:-**

   விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுத் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வித் தகைமைகள்:-**

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது வேறொரு நிறுவனத்திலிருந்து பட்டத்தை பெற்றிருத்தல்.

4. **அனுபவம்:-**

   ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் ஆயுதப் படையில் (நிரந்தர) அல்லது இலங்கை பொலிஸ் சேவையில் 8 வருடங்களுக்கு குறையாத மதிக்கத்தக்க ஒரு சேவை காலத்தை உடைய இலங்கையின் இராணுவத்தில் கெப்டன் / இலங்கை கடற்படையில் லெப்டினன்ட் / இலங்கை விமானப்படையில் விமான லெப்டினன்ட் பதவியை அல்லது இலங்கை பொலிஸில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்கு சமமான அல்லது அதற்கு குறையாத பதவியை வகித்தவராக இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு நடைமுறை:-**

   எழுத்துப் பரீட்சையின் அல்லது நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

6. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-**

   (i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்கான ஓய்வூதிய சம்பளம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் உடன்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள் / தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

**7.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்பு சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்

(இ) அனுபவ சான்றிதழ்கள்

**8.** விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த முப்படைகளின் / பொலிஸ் சேவையின் தலைவர்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**9.** ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

**10.** விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டறியப்படுமிடத்து ,அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும் , நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் காரணமாக அமையும்.

**11.** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாமல் அனுப்பப்படும் அல்லது அந்தந்த முப்படைகளின் / பொலிஸ் சேவையின் தலைவர்களின் ஊடாக அனுப்பப்படாத அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் அல்லது மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றச செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

2023 திசம்பர் மாதம் 05 ஆம் திகதி